## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No. 51/2023

2026 –ம் ஆண்டு மார்ச் மாதம் 27 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.2 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 27.03.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.ரேவதி (PW–2) | வயது | : | 47/2025 |
| த/க பெயர் | : | திரு.ராஜேஸ்கண்ணன் | தொழில் | : | கிராம நிர்வாக அலுவலர் |
| முகவரி | | கண்டிதம்பேட்டை | வட்டம் | : | மன்னார்குடி |

**முதல் விசாரணை**

நான் தற்போது கண்டிதம்பேட்டை கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வேண்டுமென இந்நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட அடிப்படையின்பேரில் இன்று ஆஜராகி சாட்சியம் அளிக்கிறேன்.

புல எண்.224A/18 வில் விஸ்தீரணம் 0.03.50 ஏர்ஸ், புல எண்.224A/7 வில் விஸ்தீரணம் 0.01.50 ஏர்ஸ் சொத்துக்கள் வாதி மல்லிகா பெயரில் கிராம சிட்டா பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. **மேற்கண்ட தாவா சொத்தின் கிராம சிட்டா பதிவேட்டின் நகலானது Ex.X1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தாவா சொத்துக்கள் பழைய கிராம பதிவேட்டில் புல எண்.224A/18 வில் விஸ்தீரணம் 0.03.50 ஏர்ஸ், சொத்தானது ம. தனபாக்கியம் பெயரிலும், புல எண்.224A/7 வில் விஸ்தீரணம் 0.01.50 ஏர்ஸ் சொத்தானது பொன்னுசாமி பெயரிலும் பதிவாகியுள்ளது. **மேற்கண்ட கிராம அ பதிவேட்டில் நகலானது Ex.X2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

தாவா சொத்து தற்போது சரவணன் த/பெ. ஞானசுந்தரம் என்பவர் நெல் சாகுபடி செய்து வருகிறார். எனது சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் உத்தரவு பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1ம் பிரதிவாதி சரவணன் 15 வருடமாக தாவா சொத்தில் சாகுபடி செய்து வருகிறார் என்பதற்கான விபரத்தை தெரிந்து கொண்டேன் என்றால் நான் இந்த கிராமத்திற்கு பணிக்கு வந்து 1 வருடம் மட்டுமே ஆவதால் தற்போது சரவணன் சாகுபடி செய்து வருகிறார் என்பது தெரியவருகிறது.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.27 17:21:56 +0530

District Munsif
Mannargudi.